# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 29 வியாழக்கிழமை (11~05~2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:142


# அரியாலையில் படையினரின் அரண்களைப் புலிகள் ஊடறுப்பு!

## கண்டி வீதியை அண்டி மிகத் தீவிரமாகச் சமர்

யாழ்ப்பாணம்,மே11

**யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடுஞ்சமர் இடம்பெற்று வருகின்றது.**

**அரியாலையில் இராணுவத்தின் பல முன்னணிப் பாதுகாப்பு அரண்களை உடைத்து கண்டி வீதி வரைப் புலிகள் முன்னேறியுள்ளனர்.**

அரியாலை, தனங்களப்பு, நாவற்குழிப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் பாதுகாப்புப் படையினரின் முன்னணிப் பாதுகாப்பு நிலைகளை இலக்கு வைத்து நேற்று அதிகாலை 3.00 மணியளவில் பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதலை ஆரம்பித்தனர்.

இது தொடர்பாக பாதுகாப்புப் படையினர் தரப்பில் வெளியிடப்பட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழிப் பாலம் படையினரின் வசமே!

### இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,மே11

நாவற்குழிப் பாலப் பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் தொடர்ந்து இருக்கின்றது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ பி.பி.ஸி. சிங்களச் சேவைக்குத் தெரிவித்தார்.

நாவற்குழிப் பாலம் புலிகளால் தகர்க்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் தொடர்பாகக் கேட்ட போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரியாலை, தனங்களப்பு, நாவற்குழி ஆகிய பகுதிகளில் புலிகள் முன்பே இருந்தனர். அவர்கள் நேற்று அதிகாலை முதல் 3 அல்லது 4 தடவைகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

அரியலையில் இருந்து தென் பகுதி நாவற்குழிவரை முன்னேறிய புலிகளை அடித்துக் கலைத்துவிட்டோம்.

நாவற்குழிப் பாலம் நேற்று இரவு வரை எமது கட்டுப்பாட்டிலேயே உள்ளது - என்றார். (உ-3)

## பாதுகாப்புத் தேடி மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,மே11

அரியாலை, கொழும்புத்துறை, கச்சேரியடி ஆகிய பகுதிகளில் இருந்து நேற்றுக்காலை முதல் மக்கள் இடம்பெயர்ந்த வண்ணம் இருந்தனர்.

அரியாலையை அண்டித் தொடர்ந்து இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாகவே மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நாடிச்சென்றனர்.

நல்லூர் கந்தசுவாமி கோயில், நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில், ஆனைப்பந்தி மெதடிஸ்த பாடசாலை ஆகியவற்றில் இடம் பெயர்ந்தவர்கள் தங்கியிருந்தனர்.

நாவற்குழி, கைதடிப் பகுதிகளைச் சேர்ந்தோர் கைதடி வீதியூடாக இடம்பெயர்ந்தனர்.

இதற்கிடையில் -

தென்மராட்சியில் கொடிகாமம், அல்லாரை, மிருசுவில், உசன், கச்சாய், மீசாலை, சாவகச்சேரி, தனங்களப்பு, நாவற்குழி, மறவன்புலவு, கைதடி,கோகிலாக்கண்டி, தச்சன

(6ஆம் பக்கம் பார்க்க)

## நகரப் பகுதியில் நேற்று ஷெல்லினால் மூவர் காயம்

யாழ்ப்பாணம்,மே11

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதியில் நேற்று வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் காயமடைந்த மூவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்புத்துறை துண்டிப் பகுதியில் வீழ்ந்த ஷெல்களினால் இராசையா பரமநாதன் (வயது44- பொன்னம்பலம் வீதி, அரியாலை) என்பவரும் -

முள்ளி வீதியில் வீழ்ந்த ஷெல்லினால் வெங்கடேஸ் நீலாம்பிகை (வயது79 -முள்ளி வீதி, அரியாலை) என்பவரும் -

அரியாலை வீதியில் வீழ்ந்த ஷெல்லினால் சோமசுந்தரம் சற்குணநாதன் (வயது 42) என்பவரும்-

காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (உ-[illegible])

## மருதானையில் 21 தமிழர் கைது

கொழும்பு,மே11

கொழும்பில் மருதானைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்றுக்காலைவரை தேடுதலை நடத்திய படையினரும் பொலீஸாரும் 21 தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட படையினரும் பொலீஸாரும் நடத்திய இந்தத் தேடுதலின் போது தமிழ் மக்கள் கூடுதலாகத் தங்கியிருக்கும் 'லொட்ஜ்கள்' மற்றும் வீடுகள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். கைது செய்யப்பட்ட 21 தமிழ் இளைஞர்களும் மருதானைப் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (உ-8)

## விமானத்தில் வைத்து 5 தமிழ் யுவதிகள் கைது

கொழும்பு,மே11

வெளிநாடு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையம் சென்ற ஐந்து தமிழ் யுவதிகள் விமானம் புறப்படச் சற்று முன்னர் விமானத்துள் வைத்துப் பொலீஸாரால்கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு டுபாய் நோக்கிச் செல்ல இருந்த இலங்கை ஏயர் லைன்ஸ் விமானத்தில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

சிவமலர், சிவதா, ரேவதி, கமலராணி, ரவினா ஆகிய ஐவருமே பொலீஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## 4 விமானங்களும் அரக்கோணத்தில்

சென்னை,மே11

இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை எடுத்துச் செல்வதற்காக திருச்சி விமான நிலையத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த நான்கு விமானங்களும் -

இலங்கையில் மோதல் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதை அடுத்து அரக்கோணம் கடற்படைத் தளத்துக்கு நேற்று சென்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்திய கடற்படைக்குச் சொந்தமான இந்த விமானங்கள் அங்கு சில பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (உ-3)

## கல்குடாவில் நால்வர் கைது

கொழும்பு,மே11

கைக்குண்டுகள் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கல்குடாவில் நான்கு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கந்தப்பா இராஜரட்ணம் (வயது 22), கந்தப்பா நாகராசா ( வயது 26), கந்தப்பா கிருஷ்ணபிள்ளை (வயது 37) ஆகியோரும் அன்ரனி யோசப் (வயது 20) என்பவருமே கைது [illegible]

### சாவகச்சேரி உ.அ.அ.பிரிவு மற்றும்

## யாழ். நகரப் பகுதியில் நேற்று திடீர் ஊரடங்கு

யாழ்ப்பாணம்,மே11

யாழ்.மாநகசபைக்குட்பட்ட பிரதேசம், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரதேசம் ஆகியவற்றில் நேற்று அதிகாலை 6மணி முதல் திடீர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

இந்த ஊரடங்கு உத்தரவு மறு அறிவித்தல்வரை தொடரும் என்று யாழ்.பாதுகாப்புத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

அரியாலைப் பகுதியில் நேற்று அதிகாலை ஆரம்பமான தாக்குதலே இந்த ஊரடங்கு பிறப்பிக்கக் காரணம் எனக் கருதப்பட்டது.

இன்று காலைவரை இந்த ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படவேயில்லை. அது இன்றும் தொடருமா என்பது இன்று அதிகாலை இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை.

இந்தத் திடீர் ஊரடங்கு அறிவிப்பால் யாழ்.நகரில் வழமைநிலை பாதிப்படைந்தது.

அதேசமயம் - வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில் பாடசாலைகள், அலுவலகங்கள் ஓரளவு இயங்கின. கடைகளும் திறந்திருந்தன.

அப்பகுதிகளில் பஸ் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றன.

வடமராட்சி பஸ்சேவை சிறுப்பிட்டி வரையும் -

காங்கேசன்துறை வீதியூடான பஸ் சேவை நாச்சிமார் கோவிலடி வரையும் - இடம்பெற்றன. (உ-3)

## மக்களைப் பாதிக்காதிருக்க கோருகிறார் ஐ.நா.செயலர்

### இருதரப்பிடமும் கோரிக்கை

லண்டன்,மே11

நடைபெற்றுவரும் யுத்தத்தில் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் நடந்துகொள்வதைத் தவிர்க்கும்படி ஐ.நா.தலைமைச் செயலர் கோபி அனான் அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளிடமும் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் -

அரசையும் விடுதலைப்புலிகளையும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவர நோர்வே நாடு எடுக்கும் முயற்சிகளுக்கு வரவேற்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை மேலும் தீவிரமடைந்தால் மக்களுக்கு ஏற்படப்போகும் துன்பங்கள் குறித்து அவர் கவலை தெரிவித்துள்ளார். (உ-8)

### இனப்பிரச்சினைக்குத் தீர்வு முயற்சி

## நோர்வே பிரதிநிதி இன்று இந்தியாவுக்கு!

புதுடில்லி,மே11

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கான முன் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வே அரசின் பிரதிநிதியான எரிக் சொலன் இன்று புதுடில்லிக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

இந்தியாவில் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவிருக்கும் இவர் தாம எடுத்துள்ள முன் முயற்சிகளின் பலாபலன்களையும் அவர்களுக்கு எடுத்து விளக்குவார்.

இந்தியாவில் பேச்சுக்களை முடித்துக்கொண்டு அவர் இலங்கை வருவாரா என்பது குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மையில் அமெரிக்காவில் உயர்மட்ட அதிகாரிகளுடன் தாம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மகாஓயாவில் நேற்று புலிகள் தாக்குதல்

கொழும்பு,மே11

அம்பாறை மகாஓயா பிரதான வீதியில் நிலைகொண்டுள்ள அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை இரு தடவைகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலைப் படையினர் பதில் நடவடிக்கைகளை மேற்கொண்டு முறியடித்தனர் என அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது 3 புலிகளின் சடலங்கயையும், பெருந்தொகையான ஆயுதங்களையும் தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும் படையினர் அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யுத்த நிறுத்த அழைப்பை நிராகரித்த இலங்கைக்கு ஒருபோதும் உதவக்கூடாது!

## இந்தியாவிடம் நெடுமாறன் கோரிக்கை

சென்னை,மே11

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்த யுத்த நிறுத்தத்தை நிராகரித்துள்ள இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா மனிதாபிமான உதவி உட்பட எந்த உதவியையும் வழங்கக்கூடாது என்று தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்திலுள்ள படையினர் பாதுகாப்பாக வெளியேறுவதற்காக விடுதலைப் புலிகள் தற்காலிக யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள முன்வந்தனர்.

படையினர் வெளியேறுவதைப் பார்வையிட வருமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கும் அவர்கள் அழைப்பு விடுத்தனர். யாழ். குடாநாட்டிலிருந்து மதிப்புடனும், கௌரவத்துடனும் உயிரிழப்புமின்றிப் படையினர் வெளியேறுவதற்கு அளித்த இந்த வாய்ப்பினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பயன்படுத்த மறுத்துள்ளமை அவரது நோக்கத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ள படையினரின் பேரால் ஆயுதங்களைப் பெற்றுப் போரைத் தொடர்வதே அவரின் நோக்கமாகும். எனவே இந்த நிலையில் மனிதாபிமான உதவி உட்பட எந்த உதவியையும் இலங்கைக்கு இந்தியா வழங்கக்கூடாது.

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-5)

### போஷாக்கு குறைபாடுடைய

# குழந்தைகள், தாய்மாருக்கு உதவ நிதியம் அமைப்பு

போஷாக்கின்மையால் ஆபத்தான நிலையிலுள்ள தாய்மார், குழந்தைகளுக்கு உதவும் பொருட்டு யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினால் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறொசெற் தம்பையா குடும்பத்தினரின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதியத்துக்கு **'Save the Brain Fund'** என்ற பெயரில் வர்த்தக வங்கியின் யாழ். கிளையில் கணக்கு ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

இந்த வங்கியிலுள்ள நிதி போஷாக்கு, புனர்வாழ்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போதுமானதாக இல்லை என்று யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போதிய நிதி தேவை என்றும் பொதுமக்கள், பொது நிறுவனங்கள், வர்த்தகர்கள் இந்த நிதியத்துக்கு உதவுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இந்நிதியத்துக்குப் பணம் அனுப்பவிரும்புவர்கள் **'Save the Brain Fund, Municipal Council, Jaffna'** என்று காசோலைகளில் எழுதி அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

# பொலீஸாரின் தடையால் ஆர்ப்பாட்டம் நிறுத்தம்

கொழும்பு,மே.11

அரசினால் கொண்டுவரப்பட்ட பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டித்தும் மீண்டும் இஸ்ரேலுடன் உறவை ஏற்படுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு பொலீஸார் தடை விதித்தனர்.

ஜே.வி.பி., நவசமசமாஜ கட்சி, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் இணைந்து கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தன.

பொலீஸாரின் தடையினைத் தொடர்ந்து இந்த ஆர்ப்பாட்டம் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எதிர்பார்த்து லிப்டன் சதுக்கத்தில் முன்கூட்டியே கூடுதலான பொலீஸார் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

பொலீஸாரின் நடவடிக்கையை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றவர்கள் திரும்பிச்சென்றனர். (ஐ-5-8)

### வன்னி ஆஸ்பத்திரிகளுக்கான

# மூன்று அம்புலன்ஸ்கள் வவுனியாவில் தவம்

வவுனியா,மே11

வன்னிப் பகுதியில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்புவதற்காக 'யுனிசெவ்' நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மூன்று அம்புலன்ஸ்கள் வவுனியாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாவி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய வைத்தியசாலைகளுக்கே இந்த அம்புலன்ஸ்கள் வழங்கப்பட்டன.

இவற்றை வன்னிக்கு அனுப்புவதற்கு பாதுகாப்பு அனுமதி வழங்கப்படாததால் ஒருமாத காலமாக வவுனியா சுகாதார திணைக்களத்தில் இவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த அம்புலன்ஸ்களை வன்னிக்கு அனுப்பி வைப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதிகோரி விண்ணப்பித்தபோதும் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்று சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5)

# ஐக்கிய இலங்கைக்குள் சகலரும் ஏற்கக் கூடிய அரசியல் தீர்வு

## அதுவே இன்று அவசியம் என்கிறது ஐ.தே.க.

நாடு பிரிவினைக்குள்ளாகாத வகையில் சகல இனங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும். இதுவே இன்றைய நெருக்கடி நிலை தீர அவசிய தேவையாகவுள்ளது என்று ஐ.தே.க. நாடாளுமன்றக்குழு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த திங்களன்று கூடிய நாடாளுமன்றக்குழு நாட்டின் நெருக்கடி நிலை குறித்து விரிவாக ஆராய்ந்தது.

இராணுவப் பின்னடைவுகள் மீண்டும் இடம்பெறுவதைத் தடுக்கும் வகையில் பாதுகாப்புப் படைகளைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசைக் கோருவதெனக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கட்சியின் தலைவர் ரணில் அண்மையில் இந்தியா சென்றிருந்த சமயம் தமிழ் நாட்டின் தலைவர்களுடன் கலந்துரையாடியதன் பயனாக இன்று இந்தியா இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளது என்று கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் சகல இனங்களினதும் அபிலாஷைகள் நிறைவேறும் வகையில் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதே இந்தியாவின் விருப்பம் என்று அந்த நாடு அறிவித்துள்ளதை வரவேற்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. (ஐ-க-3)

## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீட்டு வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் கடந்த மாதம் 24ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்படி இன்று வியாழக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரையும் தடுப்பூசி போடும் நிலையங்கள் வருமாறு:-

**இன்று**

* காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை விக்கினேஸ்வரா வித்தியாலயம் அருகிலுள்ள சனசமூக நிலையம்.
* பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணிவரை நாயன்மார்கட்டு சனசமூக நிலையம்.

**வெள்ளி**

* காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை அரியாலை,திருமகள் வீதி சனசமூக நிலையம்.
* பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணி வரை சென். றோக் போசாக்கு நிலையம். (ஐ-10)

## மீண்டும் 24 மணிநேர மின்சாரம்

துன்னாலைப் பகுதிக்கும் அதன் சுற்றாடல் பகுதிக்கும் மீண்டும் 24 மணிநேர மினசாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க துன்னாலையில் பொருத்தப்பட்ட மறுநாளே பழுதடைந்ததையடுத்து மின்சாரம் தடைப்பட்டது தெரிந்ததே.

மின்மாற்றி திருத்தப்பட்டு அதே இடத்தில் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. (க-173)


**ராஜா**
யாழ்ப்பாணம்.
*அஜித், ஷாலினி*
நடிப்பில்
**அமர்க்களம்**
19-05-2000 முதல்
**லவ் டுடே**
காட்சிகள் 10.30, 2.05
(C/12072)

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
**விஜய், ஷாலினி**
நடித்த
**கண்ணுக்குள் நிலவு**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
12-05-2000 முதல்
**குடியிருந்த கோயில்**
(76077)

**லிபேட்டி**
அச்சுவேலி
விஜயகாந், தேவயாணி,
ரகுவரன், வடிவேலு
நடிப்பில்
**வல்லரசு**
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P- 070-212223
070-212078
FAX No. 0094 -70212223
(75999)


# 11 பல்கலைக்கழகங்களுக்கு 13 ஆயிரம் மாணவர் அனுமதி

கொழும்பு,மே11

இந்த வருடத்தில் (2000-2001 கல்வியாண்டு) நாடெங்கிலுமுள்ள 11 தேசிய பல்கலைக்கழகங்களுக்கும் 13 ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

கடந்த வருடம் ஓகஸ்டில் நடந்த ஜீ.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றிருந்த 40 வீதமான மாணவர்களில் இருந்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பீடங்களுக்கும் தெரிவானோர் விவரம் வருமாறு:-

* மருத்துவம் - 900
* பல்மருத்துவம் - 75
* மிருக விஞ்ஞானம் - 75
* விவசாயம் - 700
* உணவும்போஷாக்கும்-125
* உயிரியல்விஞ்ஞானம்-810
* பிரயோகவிஞ்ஞானம்-120
* பொறியியல் - 920
* கட்டடப்பொறியியல் - 50
* கட்டடக் கலை - 75
* கணனி விஞ்ஞானம் - 50
* பௌதிகவிஞ்ஞானம்-1,305
* நிலஉளவைவிஞ்ஞானம்- 75
* பிரயோக விஞ்ஞானம் (பௌதிகம்) - 195
* முகாமைத்துவம் - 1,640
* வர்த்தகம் - 950
* கலை - 4,135
* சட்டம் - 200

கடந்தவருடம் 12 ஆயிரத்து 400 பேர் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றிருந்தனர்.

புதிய கல்வி ஆண்டில் அனுமதி பெற்றவர்களுக்கான கடிதங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி

யாழ்.பல்கலைக்கழகம் 2000-2001ஆம் கல்வி ஆண்டுக்குரிய உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்த இரண்டு ஆண்டு காலக் கற்கைநெறியைத் தொடர விரும்புவோர் எதிர்வரும் ஜூன் 16ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து 'உதவிப் பதிவாளர், பரீட்சைகளும், அனுமதிகளும் கிளை, யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரில் அனுப்பிவைக்குமாறு பதிவாளர் கேட்டுள்ளார். (உ-8)

# 4 படையினர் கைது!

கொழும்பு,மே11

பனாகொட இராணுவ முகாமிலிருந்து கடந்த வாரம் இரண்டு ரி 56 ரகத் துப்பாக்கிகள் காணாமற்போன சம்பவம் தொடர்பாக நான்கு படையினர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆயுதங்கள் காணாமற்போனது தொடர்பாக பொலீஸாருக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து பொலீஸார் நடத்திய விசாரணைகளின் போதே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தத் துப்பாக்கிகள் பாதாள உலகக் கோஷ்டிகளுக்கு விற்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (உ-5-8)


# மாட்டு வண்டி சவாரிப் போட்டி

**நியூ விதுஷா நகைமாடம் ஆதரவுடன்**
*புத்தூர் கிழக்கு*
**ஸ்ரீ விக்னேஸ்வரா வி.க. வளர்ச்சிக்கான**
*மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி*

காலம் : 14 – 05 – 2000 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 1.00 மணியளவில்
இடம் : விக்னேஸ்வரா சவாரித்திடல்
(புத்தூர் கிழக்கு)
அன்பளிப்பு: 10/=
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
**விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தினர்**
(76135)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 - 01 - 1928 | 11 - 04 - 2000 |

**கந்தையா பொன்னையா**

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (11-05-2000) வியாழக்கிழமை நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிருத்தியத்திலும், அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.*

*துவாளி வீதி,*
*இமையாணன்,*
*உடுப்பிட்டி.*

(C/12097)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு வெளிநாட்டுப் படைகளா?

# கண்காணிக்க இந்தியத் தரப்பு முடிவு!

புதுடில்லி, மே 11

வெளிநாட்டுப் படைகள் இலங்கைக்குள் காலடி எடுத்து வைப்பதை கண்காணிப்பதென இந்தியாவின் சர்வ கட்சிகளும் முடிவு செய்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை புதுடில்லியில் பிரதமர் வாஜ்பாய் கூட்டிய சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்ட இருபதுக்கும் மேற்பட்டகட்சிகளின் பிரதிநிதிகள் ஏகோபித்து இந்த முடிவை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இராணுவ உதவி எதையும் வழங்கக் கூடாது என்று சர்வகட்சி பிரதிநிதிகள் ஒருமனதாக முடிவுசெய்தது தெரிந்ததே. (உ-3)

## மோ. சைக்கிளை மீட்டுத்தர கோரி நீதிமன்றில் வழக்கு

யாழ்ப்பாணம், மே 11

மக்கள் ஜனநாயகப் பேரவையில் இருந்து விலகி ஈ.பி.டி.பி. கட்சியில் இணைந்த ஒருவர் மக்கள் ஜனநாயகப் பேரவைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஒன்றையும் தன்னுடன் எடுத்துக் சென்றுள்ளார் என்று தெரிவித்து—

அதனை மீட்டுத் தருமாறு கோரி மக்கள் ஜனநாயகப் பேரவையின் உறுப்பினரால் யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணைகள் கடந்த திங்களன்று நீதிவான் இ. த. விக்கினராஜா முன்னிலையில் இடம்பெற்றன.

மக்கள் ஜனநாயகப் பேரவையில் இருந்து கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் செல்வன் தர்மரூபன் என்ற நபர்விலகிய போது அக்கட்சி உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஒன்றையும் தம்முடன் எடுத்துச் கொண்டு ஈ பி டி. பி கட்சியில் இணைந்துள்ளதாகவும்—

தற்போது அந்த மோட்டார் சைக்கிள் ஊர்காவற்றுறையில் உள்ள ஈ. பி. டி. பி. முகாமில் உள்ளதாகவும்—

அதைத் தம்மிடம் பெற்றுத் தருமாறும் முறைப்பாட்டுக்காரரான மக்கள் ஜனநாயகச் பேரவை அமைப்பின் உறுப்பினர் நீதிவானிடம் கோரிக்கை விடுத்தார்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் ஊர்காவற்றுறை ஈ. பி. டி. பி. முகாமில் உள்ளதாகத் தெரிவிக்கப்படும் இந்த மோட்டார் சைக்கிளை மீட்டு யாழ். நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு ஊர்காவற்றுறைப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.


3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 07 — 12 — 1926

ஆண்டவன் அடியில் 14 — 05 — 1997

திருமதி
புவனேஸ்வரி அரியதுரை
திதி: 11 – 05 – 2000

ஈன்றாண்டு முதல் கண்ணை
இமைபோல் காந்த தெய்வம்
மூன்றாண்டென்ன தாயே!
முன்னூறு ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது நெஞ்சத்தில் உன் நினைவுகள்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

239, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை. (76118)


## மரக்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம், மே 11

விவசாய வனவியல் திட்டத்தின் கீழ் கோப்பாய், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளில் நூறு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 300 மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

சமண்டலை, நெல்லி போன்ற மரக்கன்றுகள் இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. (உ-5)

## மின்சாரம் வழங்கல்

சுன்னாகம், மே 11

சுன்னாகம் தெற்குப் பகுதிக்கு மீண்டும் பழைய மின் மார்க்கமாக ஊடாக மின் சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் இப் பகுதியில் இராணுவ மண் அணை இருந்தமையால் தற்காலிக இணைப்பு வழங்கப் பட்டிருந்தது.

மேற்படி மண் அணை அகற்றப்பட்டு பாதை திறக்கப்பட்டதை அடுத்து தற்காலிக இணைப்பில் அதிகம் மின்வெட்டும் வலுக்குறைவும் காணப்படுவதை சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தினர் சுட்டிக்காட்டி மனு ஒன்றை சுன்னாகம் மின் அத்தியட்சகருக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்தே மீண்டும் நிரந்தரமானபாதை வழியே மின்சாரம் வழங்கப் பட்டுவருகிறது. (க-27)

## மட்டக்களப்பு தாளங்குடாவில் வேலி அடைக்கக் கட்டுப்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆரையம்பதியின் தாளங்குடா கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் வீட்டு எல்லைகளில் வேலி அடைப்பதாயின் நிலத்திற்கு மேல் மூன்று அடி உயரத்திலும் கூடவாக மறைப்பு இருக்கக்கூடியதாகவே வேலி அடைக்க வேண்டும்.

—இவ்வாறு வேலி அடைப்பதற்கு கட்டுப்பாடுடன் அனுமதி! வழங்கியிருக்கின்றனர் படையினர்.

கடந்த சில மாதங்களாக பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இந்தப் பகுதியில் மறைவு வேலிகளை அமைப்பதற்குப் படையினர் தடை விதித்திருந்தனர்.

இதனால் இந்தக் கிராமத்தின் மக்கள்— பெரும்பாலும் பெண்கள்—பல அசௌகரியங்கள் எதிர்நோக்கி வந்தனர்.

இப்பகுதி மக்கள் இந்த நடைமுறையை நீக்கக் கோரி மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராஜாவிடம் முறையிட்டிருந்தனர். அவர் மேற்கொண்ட நடவடிக்கை அடுத்து இந்தத் தடை தளர்த்தப்பட்டுள்ளது.

## வாகனக் காப்புறுதி பெற மக்கள் முண்டியடிப்பு

காப்புறுதிச் கூட்டுத்தாபன யாழ். கிளையில் வாகனங்களுக்குக் காப்புறுதி செய்பவர்களின் எண்ணிக்கை அதிகாரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தற்போது வாகனங்களுக்கு பெற்றோல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் — எரிபொருள் அட்டை வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம் என்றவகையில் வழங்கப்பட்டுவருவதை அடுத்தே — எரிபொருள் அட்டை பெறுவதற்கு காப்புறுதிப் பத்திரம் அவசியம் என்பதால்—

வாகனங்களுக்குக் காப்புறுதிப்பத்திரம் பெறுவோர் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது.

வாகனக் காப்புறுதி வேலைகள் அதிகரித்திருப்பதினால் வாரத்தில் திங்கள், புதன். வெள்ளி ஆகிய மூன்று நாள்களில் மட்டுமே இவ்வேலைகள் கவனிக்கப்படும் எனகாப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-15

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 11

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் பின்வருவோரைத் தம்மூடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

★நீலன்கணேசன், மாசேரி, வரணி.

★ மதியாபரணம், மே/பா, ச. யதுரந்து, தவசிக்குளம், மிருசுவில்.

★ க. வள்ளிப்பிள்ளை, மே / பா, சின்னத்துரை நகம்மா, வைத்தியசாலை ஒழுங்கை, பெரியபளை, பளை.

★ ச. சண்முகம், 4, ஐயனார் கோயில் வீதி, நாவற்குழி. [க-10]

## அதிகாரப் பகிர்வு மூலம் விரைந்து தீர்வு காண்க!

### யாழ். எம். பி. கன்னி உரை

கொழும்பு, மே 11

அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் விரைந்து தீர்வு காணப்பட வேண்டும்.

— யாழ் மாவட்டத்தின் ஈ. பி. பி. டியின் எம். பியாக நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பதவியேற்ற மார்க்கண்டு குணசேகரம் தனது கன்னி உரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முறையான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால் அதனை தமிழ் மக்கள் வரவேற்பார்கள். ஆகவே தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை அரசு முன் வைக்க வேண்டும் என் அவர் தனது உரையில் கேட்டுக் கொண்டார்.

ஈ.பி.டி. பி அமைப்பைச் சேர்ந்த மற்றொரு யாழ். மாவட்ட எம்.பியான எஸ். தவராஜா உரையாற்றுகையில்—

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு துரிதமாகக் காணப்பட வேண்டும்.

இதன் மூலமே புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் நிதி உதவி விடுதலைப்புலிகளுக்கு சென்றடையாமல் தடுக்க முடியும்.

அதேவேளை விடுதலைப் புலிகளையும் அரசியல் தீர்வு மூலமே வெற்றிகாண முடியும்—என்றார். (உ-8-5)


நீங்காத நினைவலைகள்
4 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 03 — 09 — 1909

உதிர்வு 26 — 04 — 1996

திதி: 11-05-2000

அமரர்
திருமிகு வி. சிவசுப்பிரமணியம் J. P.
(B. A, B. Sc. L.snd, P. G, T, F. R. G. S)
(இ. ளப்பாறிய அதிபர் யா /ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

அன்பின் ஒளியாய் பாசத்தின் இருப்பிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் எங்களை
வழிநடத்தி வாழவைத்த தெய்வமே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
என்றும் உங்கள் நினைவுகள் எங்களைவிட்டு நீங்கா

அன்புடன் நினைவுகூரும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (76109)


## அரசின் புதிய பாதுகாப்புச் சட்டங்கள் ஜனநாயத்துக்கு விரோதமானவை

### ஜோசப் எம். பீ. நாடாளுமன்றில் உரை

கொழு பு, மே 11

அரசு தற்போது பிரகடனப் படுத்தியுள்ள புதிய பாதுகாப்பு நடைமுறைகளும் சட்டங்களும் ஜனநாயக வழி முறைகளை முற்றாகப் புறக்கணிப்பவையாகவே உள்ளன.

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

எவரும் கேள்வி எழுப்ப முடியாத அதிகாரம் கொண்ட அரசினை எதிர் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

சகல மக்களுக்கும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்ற ஜனநாயகக் கோட்பாடு மறுக்கப்பட்டுள்ளது. எனவேதான் தமிழ் மக்களை முழுமையாக அடிமைப்படுத்தும் இந்த அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக எமது கட்சி தொடர்ந்து வாக்களித்து வருகிறது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 28 ஆண்டுகளாக நாடு தொடர்ந்து அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆளப்பட்டு வருகிறது.

செய்தி ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தணிக்கை முறை அரசின் பொறுப்புக்களை முழுமையாக மூடிமறைக்கிறது. நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டங்கள் மூலம் படையினருக்கு கொடூரமான அதிகாரங்களை அரசு வழங்கியுள்ளது.

இது ஜனநாயக விரோதப் போக்குக்கு வழி செய்யும்.

இனியாவது அரசு இனப் பிரச்சினையைத் தீர்க்க முன் வரவேண்டும். — இவ்வாறு அவர் குறிப்பிட்டார். (உ-8-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட 203 டாஸ் ஆட்டோ விற்பனைக்குஉண்டு தொடர்பு-: வ. புவந்திரன் NO. 42, K. K S. வீதி, யாழ்ப்பாணம். (76129)

### படிவம்

கல்வி அமைச்சின் புதிய சுற்று நிருபத்திற்கு அமைய அச்சிடப்பெற்று தரம் ஒன்றுக்கான பாடசாலை அனுமதிப் படிவம் விற்பனையாகின்றது. விலை ரூபா 2.00 பாரதி, 430, சாங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/1209)

### பெண் உதவியாளர் தேவை

மூவர் கொண்ட குடும்பத்திற்கு சமையல் வேலை செய்யக்கூடிய பெண் உதவியாளர் தேவை. பெண் 40 தொடக்கம் 50 வயதிற்குட்பட்டவராகஇருத்தல்விரும்பத்தக்கது தங்குமிட வசதி, சாப்பாடு நல்ல சம்பளம் யாவும் வழங்கப்படும். குடும்பப் பொறுப்புக்கள் இல்லாதவராக இருத்தல் நன்று. தொடர்பு: விளம்பர இல. 1055, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (76142)

### பொய்யாமொழி ஜோதிடம்

மாவை -கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோயில் திருவிழாக் காரணமாக 20 - 05 - 2000 வரை நல்லூர், மல்லாகம் சோதிட நிலையங்கள் மூடியிருக்கும் என்பதையும் மீண்டும் 23ஆம் திகதியில் இருந்து சந்திக்கலாம் எனவும் அறியத் தருகின்றோம். (76078)

### தேவை

ஆங்கில அறிவுள்ள பெண் பிள்ளைகள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- குறிஞ்சி, 323, பரமேஸ்வராச் சந்தி, (கம்பஸ் சந்தி). மருந்து விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (76104)

### ஆனந்தா சோதிட நிலையம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய பதில் உடனே கிடைக்கும். டாக்டர் த. சிவானந்தன், பிரபல சோதிடர், செட்டித்தெருச சந்தி, நல்லூர். (76021)

## நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

சுதுமலை, மே 11

ஆனைக்கோட்டை காக்கைததீவு வீடமைப்பு திட்டத்துக்கு குழாய் ஊடான நீர்விநியோகத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த நீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டு விட்டது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

ஆனைக்கோட்டை கரப்பிரான் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் இந்த நீர் இறைக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தது.

இதேவேளை அதே தினத்தன்று கரப்பிரான் கோயில் உண்டியலும் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-139)

## விசாரணை

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் தையல் வேலை செய்வோர் நேற்று முன்தினம் கடந்த திங்களன்று அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

இவர்களின் விவரங்கள் பெறப்பட்டதுடன் விரல் அடையாளங்களும் பதிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

# போதைப் பொருள்கள் பாவித்தால் சமுர்த்தி கொடுப்பனவு இடைநிறுத்தம்

சமுர்த்தி உதவி பெறுகின்ற குடும்பங்களைச்சேர்ந்த உறுப்பினர்கள் எவராவது போதைப்பொருள் பாவிப்பவர்களாகவோ அல்லது சூதாட்டத்தில் ஈடுபடுபவர்களாகவோ இருந்தால் அவர்களுக்கு வழங்கப்படும் சமுர்த்திக் கொடுப்பனவுகளை தற்காலிகமாக இடைநிறுத்தும் அதிகாரம் பிரதேச செயலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கை ஒன்றினை வறுமை நிவாரண ஆணையாளர் பி. கே. குணவர்த்தனா வெளியிட்டுள்ளார்.

அவ்வாறு நிறுத்தப்படும் போது அந்தக் குடும்பத்துக்கு எழுத்துமூலம் அறிவிப்பதுடன் புத்திபுகட்டும் கடிதம் ஒன்றும் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இடைநிறுத்தம் செய்வதால் ஏற்படக்கூடிய அசெளகரியங்கள், துன்பங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இடைநிறுத்தும் குறிப்பிட்ட காலத்தை அதாவது ஒரு தவணையை வரையறை செய்யுமாறும் கூறப்பட்டுள்ளது.

இவர்களது சமுர்த்தி முத்திரைகளை பிரதேச செயலர் தனது பொறுப்பில் வைத்திருப்பதுடன் கட்டாய சேமிப்பு, சமூக பாதுகாப்பு நிதியம் என்பவற்றுக்கான முத்திரைகளை அவற்றுக்கு வரவு வைக்க வேண்டும்.

குறிப்பிட்ட காலத்துக்கு உரிய கடன் தவணைப் பணத்தைச் செலுத்துவதற்கு எஞ்சிய முத்திரைகள் பயன் படுத்தப்படவேண்டும் எனவும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

---

விண்ணக வாழ்வின்

## 30ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



மண்ணில்: 15 — 02 — 1925

விண்ணில்: 12 — 04 — 2000

அமரர்

## பஸ்ரியன் றோமபாலா

''இன்று தானே நீர் என்னோடுகூடப் பேரின்ப வீட்டில் இருப்பீர்''

(லூக்;23-45)

எமது அன்புத்தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து எங்கள் துயரத்தில் பங்கு கொண்டோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் அனுதாபச் செய்திகளையும் கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— குடும்பத்தினர்

115, ஸ்ரேஷன் றோட்,
யாழ்ப்பாணம். (76106)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லும்



மலர்வு: 08 — 05 — 1924

உதிர்வு: 11 — 04 — 2000

## அமரர் ஆறுமுகம் சோமசுந்தரம்

(வேலணை கிழக்கு, வேலணை — 4)

எங்கள் குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து எங்கள் துக்கத்தில் பங்கு கொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் ஒத்தாசை புரிந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் உள்ளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (11- 05- 2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன்அழைகின்றோம்.

குடும்பத்தினர்
மனைவி, மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

முத்துமாரி அம்மன் கோயில் வீதி,
வேலணை கிழக்கு, வேலணை - 4. (76134)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உதிப்பு: 19 — 11 — 1931

உதிர்வு: 25 — 04 — 1996

அமரர்

## விசுவர் கந்தையா (சோமு)

திதி: 11 — 05 — 2000

பாசத்தின் மகிமை தன்னை
தந்தையே பண்புடனே பேணிக்காத்தீர்
ஆண்டுகள் நான்கு சென்றாலும்
தந்தையே உங்கள் நினைவு
என்றுமே எம்மை விட்டு அகலாது

என்றும் நினைவுடன்
மனைவி இராசகிளி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சூசையப்பர் கோவிலடி,
கோப்பாய் மத்தி. (சி/12094)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 04 — 04 — 1907

மறைவு: 22 — 04 — 1999

## அமரர் சின்னத்தம்பி வல்லிபுரம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: 11-05-2000

எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டிய ஒளிவிளக்கே!
பண்பையும் பாசத்தையும் சேர்த்து
அறிவூட்டிய அன்புத் தந்தையே!
உங்கள் ஆன்மா சாந்தியடைய
கூடத்து மனோன்மணி அம்பாளைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை. (76103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் யுத்தநிறுத்தம்!

காபூல்,மே11

ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான் அமைப்பும் எதிர்க்கட்சிக் கூட்டணியும் யுத்த நிறுத்தம் செய்வதற்கு இணக்கம் கண்டுள்ளன.

இஸ்லாமிய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட இருதரப்பினரும் யுத்த நிறுத்தத்துக்கு இணங்கியுள்ளனர்.

யுத்த நிறுத்தம் ஏற்பட்டதன் பின்னர் இரு தரப்பினரும் தடுத்து வைத்துள்ள அரசியல் கைதிகளைப் பரிமாற்றம் செய்துகொள்ளவும் முடிவு செய்துள்ளன.

நேற்று ஆரம்பமாகவிருந்த இந்தக் கைதிகள் பரிமாற்றத்தை ஐ.நா.சபை, இஸ்லாமிய சம்மேளனம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியன கண்காணிக்கவுள்ளன.

யுத்த நிறுத்தம் ஏற்பட்டதை அடுத்து ஆப்கானில் மூடப்பட்டிருந்த சகல பாதைகளும் பொது மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்படுகின்றன.

அந்தப் பாதைகள் ஊடாக மனிதாபிமானப் பணிகளுக்கான போக்குவரத்தும் ஆரம்பமாகியுள்ளன. (உ-3-8)

# ‘ஆபிரிக்கத் தலையீட்டுப் படை’ சியராலியோனுக்குச் செல்லும்?

பிரீரவுன்,மே11

ஆபிரிக்க நாடான சியராலியோனில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை அடுத்து -

அங்கு ‘ஆபிரிக்கத் தலையீட்டுப் படை’ என்ற பெயரில் அமைதி காக்கும் படை ஒன்றை அனுப்புவது குறித்து யோசிப்பதென ஆபிரிக்க நாட்டு தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் நைஜீரியாவின் தலைநகர் அபுஸாவில் நேற்றுமுன்தினம் கூடி இந்த முடிவை எடுத்துள்ளனர்.

சியராலியோனில் அமைதி பேணும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த ஐ.நா.சமாதானப் படை வீரர்கள் 208 பேர் உட்பட முந்நூறுக்கும் அதிக ஐ.நா. ஊழியர்களை அங்குள்ள கிளர்ச்சிப் பிரிவினரான புரட்சிகர ஐக்கிய முன்னணியினர் சிறைப்பிடித்ததை அடுத்து, ஐ.நா. சமாதானப்படையின் பணி கேள்விக் குறியாகியிருப்பது தெரிந்ததே.

ஐ.நா.படை சியராலியோனுக்குச் செல்வதற்குக் காரணமாக இருந்த 1999ஆம் ஆண்டின் அமைதி உடன்படிக்கையை அங்கு மீண்டும் முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகள், மாற்று வழிகள் ஆகியவை குறித்து ஆபிரிக்கத் தலைவர்கள் தற்போது மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார்கள்.

ஐ.நா.சமாதானப் படையை விலக்கிவிட்டு, அந்த இடத்துக்கு வலுமிக்க ஆபிரிக்கத் தலையீட்டுப் படை ஒன்றை அனுப்பலாம் என ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கருதுகின்றார்கள்.

ஆனால் ஐ.நா.சமாதானப் படை தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை செவ்வனே நிறைவேற்ற முடியும் எனத் தாம் இன்னும் திடமாக நம்புவதாக சியராலியோனின் தலைநகர் பிரீரவுனுக்கு நேற்று ஹெலியில் சென்றுதிரும்பிய பின்னர் ஐ.நா.சமாதானப் படையின் தளபதி தெரிவித்தார். (உ-3-8)

# ஐ.நா. சமாதானப் படை பின்னோக்கி நகர்கிறது

பிரீரவுன்,மே11

சியராலியோனின் தலைநகர் பிரீரவுனில் இருந்து கிழக்கே 40 மைல் தூரத்தில் அமைந்துள்ள முக்கிய தளம் ஒன்றில் இனந்தெரியாத குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து அந்த நகரில் நிலைகொண்டிருந்த ஐ.நா.சமாதானப் படையினர் பின்வாங்குவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த நகரிலே பதற்றமான சூழ்நிலை நிலவுவதாகவும்-

ஆனால் மோதல்கள் உச்ச நிலைக்கு இன்னமும் செல்லவில்லை என்றும் -

ஐ.நா.படையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (உ-3-8)

# உலக அரங்கில்

## புதிய கருவி அமைப்பு

புதுடில்லி,மே11

தூர இடங்களிலிருந்தும் தகவல்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் கையடக்கமான கருவி ஒன்றை இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு ‘ஸ்ரோ’ தயாரித்துள்ளது.

இது தொலைபேசி, பக்ஸ் ஆகியவை போல தூர இடங்களிலும் கிராமப் புறங்களிலும் செயற்படும்.

இந்தப் புதிய கண்டுபிடிப்பினை பாராட்டிப் பேசிய ‘ஸ்ரோ’ அமைப்பின் தலைவர் கே.கஸ்தூரிரங்கன் "போர் முனைகளிலும், தொலைதூர கிராமங்களிலும், தொழில் வாய்ப்புப் பணிகள் மற்றும் வளர்ச்சி திட்டங்களிலும் அதனைப் பரவலாகப் பயன்படுத்தலாம்" என்று கூறினார். (உ-8)

# இந்திய - நேபாள விமான சேவை மீண்டும்

புதுடில்லி,மே11

இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையில் அடுத்த மாதம் முதல் மீண்டும் விமானச் சேவை ஆரம்பமாகவுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் ‘இந்தியன் எயர்லைன்ஸ்’க்குச் சொந்தமான விமானம் ஒன்று நேபாளத்தில் இருந்து புறப்பட்ட பின்னர் கடத்தப்பட்டதை அடுத்து, இரு நாடுகளுக்கும் இடையிலான விமானச் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

விமானங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் நேபாளம் காட்டிய மெத்தனப் போக்கே விமானம் கடத்தப்பட்டதற்குக் காரணம் என இந்தியா குற்றம் சுமத்தி வந்தது.

இதன் பின்னர் நிலைமையைச் சீர்செய்வதற்காக நேபாள வெளிவிவகார அமைச்சர் சக்கர பிரகாஷ் வஸ்கோலா புதுடில்லிக்கு விஜயம் செய்தார்.

அவர் விமானப் போக்குவரத்து அமைச்சர் சரத் யாதவ்வுடன் பேச்சு நடத்தியதையடுத்து இரு நாடுகளுக்கும இடையிலான விமானப் போக்குவரத்தை ஆரம்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

# கணனி வைரஸை ஏவிய கல்லூரி மாணவன் கைது!

## பிலிப்பீன்ஸ் பொலீஸார் நடவடிக்கை

மணிலா,மே11

அமெரிக்காவின் வெள்ளை மாளிகை உட்பட பல இராணுவ தலைமையகங்களை ஸ்தம்பிக்க வைத்த ‘லவ் பக்’ என்ற கணனி வைரஸை ‘ஏவி விட்டவர் எனக் கருதப்படும் பிலிப்பீன்ஸ் நாட்டைச் சேர்ந்த - கல்லூரி மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் பொலீஸ் மா அதிபர் பந்துறு லெக்ஸன் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவனுடன் தங்கியிருந்ததாகக் கூறப்படும் இளம்பெண் தலைமறைவாகிவிட்டார் என்றும் -

அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - அவர் மேலும் கூறினார்.

கைதான மாணவன் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளான் என்றும் -

அவன் மூலம் பல விடயங்கள் அம்பலமாகியுள்ளன என்றும் -

அவர் சொன்னார்.

# ஷெரீபின் மேன்முறையீடு 22ஆம் திகதி முதல் விசாரணை

இஸ்லாமாபாத்,மே11

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட - பதவி கவிழ்க்கப்பட்ட - பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகும் என்று சிந்து மாகாண உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இராணுவ ஆட்சியாளர் முஷ்ராப்பைக் கொலை செய்யச் சதி செய்தமை, அவர் பயணம் செய்ய விமானத்தைக் கடத்த முயன்றமை ஆகியவை தொடர்பாக இவர் மீது தொடரப்பட்ட பயங்கரவாதக் குற்றங்களின் மீது அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது தெரிந்ததே. (உ-3)

# இஸ்ரேல் நிலை மீது தாக்குதல்

டயர்,மே11

தென் லெபனானில் உள்ள இஸ்ரேலிய சார்பான கூலிப் படையின் நிலை ஒன்றின் மீது கெரில்லாக்கள் நடத்திய தாக்குதல்களில் இஸ்ரேலிய படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடும் காயமடைந்த இவர் வட இஸ்ரேலில் உள்ள மருத்துவமனை ஒன்றிலே அனுமதிக்கப்பட்ட சமயம் அங்கு உயிரிழந்தார். (உ-3)

# பாக். கப்பல்கள் ஈரானில்

தெஹ்ரான்,மே11

பாகிஸ்தானின் மூன்று கடற்படைக் கப்பல்கள் ஈரானிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளன.

ஈரானிய ஹோர்மஸ் நீரிணையில் உள்ள பண்டர் அபாஸ் துறைமுகத்துக்கு வருகைதந்துள்ள இந்தக் கப்பல்களில் நீர்மூழ்கி ஒன்றும் அடங்கும்.

இதேசமயம் ஈரானிய-பாகிஸ் [illegible] இவ்வாரம் பேச்சுக்களை ஆரம்பிக்கவிருக்கின்றனர். (உ-3)

# அமெரிக்காவுக்கு எதிராக மன்னிப்புச் சபை அறிக்கை

ஜெனீவா,மே11

அமெரிக்காவில் கிரிமினல் சந்தேக நபர்கள் திட்டமிட்ட முறையில் சித்திரவதைக்கு உள்ளாக்கபடுகின்றனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று ஜெனீவாவில் வெளியிட்ட தனது ஆகப்பிந்திய அறிக்கையில் குற்றஞ்சாட்டுகின்றது.

அமைதி முறையில் - கூட்டமாக - எதிர்ப்புத் தெரிவிப்போர் மீது வேண்டுமென்றே கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித்தல், கைதிகளை மின்சார ‘ஷொக்’ கொடுத்துத் துன்புறுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அமெரிக்காவில் இடம்பெறுவதாக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்கா இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

# 21 பாக். மீனவர்களை இந்தியா விடுவித்தது

புதுடில்லி,மே11

கடந்த வருடம் மார்ச் மாதம் இந்திய கடல் எல்லைக்குள் வைத்துக் கைது செய்யபப்பட்ட 21 பாகிஸ்தான் மீனவர்களை இந்தியா விடுவித்தது.

பாகிஸ்தான் சிறையில் இருந்த 20 இந்திய மீனவர்களைக் கடந்த வாரம் அந்த நாடு விடுவித்தமைக்குப் பதிலாக இந்தியா இவர்களை நேற்று விடுதலை செய்தது.

ஓர்ஸா பகுதியில் சர்வதேச எல்லைக் கோட்டில் வைத்துப் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் இவர்களை ஒப்படைக்க இந்தியா ஏற்பாடு செய்துள்ளது. (உ-3-8)

*உணவு மற்றும் மருந்து அனுப்புதல்:*

# கியூபா மீதான தடையை தளர்த்துவதற்கு சிபாரிசு!

## செனட் உபகுழு விதப்புரை

வாஷிங்ரன்,மே11

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கியூபாவக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதாரத் தடையை உணவு மருந்துப் பொருள்கள் விவகாரங்களில் உடனடியாக நீக்கவேண்டும்.

இவ்வாறு அமெரிக்க செனட் சபையின் உபகுழு ஒன்று சிபாரிசு செய்திருக்கின்றது.

41 ஆண்டுகளுக்கு முன்னர் கியூபாவில் பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான அரசு ஸ்தாபிக்கப்பட்ட காலம் தொடக்கம் அமெரிக்கா அந்த நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் விவகாரங்களில் இந்தத் தடையை நீக்கி அவற்றை கியூபாவுக்கு அனுப்புவதற்கான அனுமதியை வழங்கும் முடிவுக்கு அமெரிக்கா வரவேண்டிய காலம் வந்துவிட்டது என்று இந்த சிபாரிசுக்கு ஆதரவாக வாக்களித்த அமெரிக்க செனட் சபை உபகுழு தெரிவித்தது.

இதேபோன்ற சிபார்சை கடந்த ஆண்டிலும் இந்த உபகுழு வழங்கியது.

ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்காக செனட் சபைக்கு அது சமர்ப்பிக்கப்பட்டபோதும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த செனட்டர்களின் கடும் எதிர்ப்புக் காரணமாக அது தோற்கடிக்கப்பட்டது. பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான கியூபா அரசு மீதான எதிர்ப்புணர்வு அமெரிக்காவில் வெகுவேகமாக குறைந்து வருவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

# வடகொரியாவுடன் ஆஸி. மீண்டும் ராஜதந்திர உறவு

கன்பெரா,மே11

இருபத்தைந்து வருட இடைவெளிக்குப் பின்னர் ஆஸ்திரேலியாவும் வடகொரியாவும் ராஜதந்திர தொடர்புகளை மீள ஆரம்பிக்க இணங்கியுள்ளன.

கடந்த ஜனவரியில் இத்தாலி கம்யூனிஸ் நாடான வடகொரியாவுடன் ராஜதந்திர உறவுகளை ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலியா வடகொரியாவுடன் உறவைப் புதுப்பித்துள்ளது.

வதிவிடம் அற்ற அடிப்படையில் வடகொரியாவுடன் ஆஸ்திரேலியா உறவுகளை ஏற்படுத்தியுள்ளது என்று ஆஸ்திரேலியா வெளிவிவகார அமைச்சர் டவுணர் தெரிவித்துள்ளார்.

விரைவில் வடகொரியாவுக்கு தூதுவர் நியமிக்ககப்படுவார் என்றும் -

அவர் சீனத் தலைநகரில் இருந்து செயற்படுவார் என்றும் - ஆஸ்திரேலியா மேலும் தெரிவித்துள்ளது. (உ-3)

# ஆப்கானில் உளவுபார்த்த இரு அரேபியர்கள் கைது

இஸ்லாமாபாத்,மே11

ஒஸாமா பின் லேடன் தங்கியுள்ள இடத்தைத் தேடி அமெரிக்காவுக்காகவும், இஸ்ரேலுக்காகவும் உளவு பார்த்த இரு அரபு உளவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக தலிபான அறிவித்துள்ளது.

சிரியா மற்றும் ஈராக் நாடுகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒஸாமா பின் லேடனும் அவரது ஆள்களும் தங்கியுள்ள இடத்தைக் காண் தாம் முயற்சித்ததாக கைதான இருவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்தப் பணிக்காக 18 மாதங்களாக ஆப்கானில் தங்கியிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-3)

# 2 அயிரம் பேரை ஈரான் விடுவிப்பு

1985ஆம் ஆண்டு ஈரானுக்கும் ஈராக்குக்குமிடையில் நடந்த சண்டையின்போது சிறைபிடித்தவர்களில் இரண்டாயிரம் பேரை ஈரான் நேற்று விடுதலை செய்தது.

இந்தச் சண்டையின்போது இருதரப்பும் பத்தாயிரக்கணக்கானவர்களைக் கைது செய்து சிறைகளில் அடைத்து வைத்துள்ளன.

இவர்களில் 2 ஆயிரம் பேரையே ஈரான் விடுவித்துள்ளது. (உ-3)

## நிலநடுக்கம் 15 பேர் பலி

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து வடகிழக்கே அமைந்துள்ள மத்திய காவேரிப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 15 பேர்வரை உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இலங்கைக் கடற்பிரதேசத்தில் உள்ள

# மணல்திட்டுக்களில் இறக்கிவிடப்படும் ஈழ அகதிகளை மீட்பதில் நெருக்கடி

சென்னை,மே11

இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து தமிழகம் நோக்கி வரும் அகதிகளை ஏற்றிவருகின்ற படகுகளின் உரிமையாளர்கள் கடலில் உள்ள மணல்திட்டுக்களில் இறக்கி விடுவதாகவும் -

அந்த மணல் திட்டுக்களில் பெரும்பாலனவை இலங்கைக் கடல் எல்லையில் இருப்பதால் அகதிகளை மீட்பதில் இந்தியக் கடலோரப் படையினர் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் -

தமிழகக் கடலோரக் காவல் துறை விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மணல் திட்டுக்களில் இறக்கிவிடப்படும் அகதிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

"இந்த மணல் திட்டுக்கள் இலங்கைக் கடற்பரப்பில் உள்ளதால் அவர்களை மீட்பதற்காக இந்தியக் கடலோரக் காவல்படையினர் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீற வேண்டிய நெருக்கடியும் ஏற்படுகின்றது."

- இப்படி அந்த செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில் -

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு வரும் அகதிகளுக்கு அளிக்க வேண்டிய உதவிகள் குறித்து தமிழக அமைச்சரவை நேற்று நீண்ட நேரம் ஆராய்ந்தது.

முதல்வர் மு.கருணாநிதி தலைமையில் கூடிய அமைச்சரவை அகதிகளுக்கு வீடுகள் அமைத்தல், அவர்களுக்கு வழங்கவேண்டிய உதவிகள் ஆகியவை குறித்து ஆராய்ந்து பல முடிவுகளை எடுத்தது என்று அறிவிக்கப்பட்டது.

(உ-3)

ஜனவரிக்குப் பின்

# இதுவரை 600 அகதிகள் தமிழகத்துக்கு வருகை

சென்னை,மே11

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை 600 அகதிகள் இந்தியா வந்துள்ளனர் என்று இந்திய கடலோரக் காவல் துறை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இலங்கையில் மோதல்கள் இல்லாத போதும் -

இந்தக் காலப்பகுதியில் இரண்டாயிரத்து 500பேர் அகதிகளாக தமிழகம் வந்தனர்.

அத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இம்முறை குறைவானவர்களே வந்து சேர்ந்துள்ளனர் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

# கச்சைதீவை மீட்பதற்கு தமிழகத்தில் புதுக்கட்சி

சென்னை,மே11

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்போம் என்ற இலட்சியத்துடன் புதிய கட்சி ஒன்று தமிழகத்தில் உதயமாகியுள்ளது.

தமிழக மீனவர்களின் வளர்ச்சிக்காக தமிழ் மாநில மீனவர் பாதுகாப்புக் கழகம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கட்சியைப் பதிவு செய்ய தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் வி.தமிழ்அன்பன் தெரிவித்தார்.

(உ-3)

# வலய மட்டத்தில் ஆசிரிய இடமாற்றம்

கொழும்பு,மே11

பாடசாலை மட்டத்தில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களை அதே வலயத்தில், ஆசிரியர்கள் வெற்றிடம் நிலவும் போது பாடசாலைகளுக்கு, எதிர்வரும் ஜூன் 10ஆம் திகதிக்கு முன்னர் இடமாற்றம் செய்யுமாறு வடக்கு - கிழக்கு மாகாண பதில் கல்விப் பணிப்பாளர் இ.சிவாணந்தன் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

வலய மட்டத்தில் பாடசாலைகளுக்கு ஆசிரியர் பரம்பலை மேற்கொண்ட பின்னர் மேலதிக ஆசிரியர்களை ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் வெளி மாவட்ட மற்றும் வலயப் பாடசாலைகளுக்கு இடம்மாற்றம் செய்வதற்காக சகல ஆசிரியர்களின் விவரங்கள் அடங்கிய பெயர்ப் பட்டியலை அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்விப் பணிமனை சகல பாடசாலைகளையும் கேட்டுள்ளது.

பாடரீதியாக ஆசிரியர் வெற்றிடங்களைக் கணக்கிடும் அதே வேளை குறித்த பாடசாலை மற்றும் வலயம் ஆகியவற்றின் சேவைக் காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

இதேவேளை - 33 வயதுக்கும் கூடிய ஆசிரியர்களை அவர்களது விருப்பமின்றி இடமாற்றம் செய்ய வேண்டாம் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

(உ-8)

## அரியாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்களில் தெரிவிக்கப்பட்டதாவது:-

விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலுக்கு மோட்டார்கள், ஷெல்கள் ஆகியவற்றைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தினர்.

படையினர் பதில் தாக்குதல் நடத்தி புலிகளின் தாக்குதலை முறியடித்தனர்.

இந்த மோதலில் பெருந்தொகையான புலிகள் காயமடைந்தனர்.

இருந்தபோதும் அரியாலையில் புலிகள் இராணுவத்தின் பல முன்னணி பாதுகாப்பு அரண்களை உடைத்துள்ளனர்.

பீரங்கிப் படையினரின் உதவியுடன் தரைப்படையினர் புலிகள் மீது பாரிய தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

விமானப் படையினரும் புலிகளின் நிலைகளின் மீது இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துகின்றனர்.

அரியாலைக்கும் தனங்களப்புக்கும் மேலதிக படையினர் அவசரமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதலில் இருதரப்புக்கும் பேரிழப்பு ஏற்பட்டிருக்கின்றது.

- இப்படி அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி வீதியில் அரியாலைக்கும் நாவற்குழிக்கும் இடைப்பட்ட இரண்டு மைல் நீளப் பிரதேசத்தைத் தாங்கள் கைப்பற்றி வைத்துள்ளதாகவும் -

நாவற்குழிப் பாலத்தைத் தாங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து அதைத் தகர்த்த பின் அதன் ஒரு பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் -

விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

(உ-3-8)

## நோர்வே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய கலந்துரையாடல்கள் தொடர்பாகவும் அவர் இந்திய அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறிவிருக்கின்றார்.

இதற்கிடையில் -

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இந்தியா முன்னெடுத்துள்ள சர்வதேச கூட்டு முயற்சிகளின் ஓர் அங்கமாக, ஐ.நா. சபையின் பாதுகாப்புக் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் இந்தியா பேச்சு நடத்தி வருகின்றது.

அமெரிக்கா, பிரான்ஸ் , பிரிட்டன் போன்ற பாதுகாப்புக் க்வுன்ஸில் நாடுகளுடன் பேச்சுக்களை இந்தியா ஆரம்பித்துள்ளது என்றும் -

ஏனைய நாடுகளுடனும் இந்தியா தொடர்பு கொண்டுள்ளதாகவும்-

தெரிவிக்கப்பட்டது.

(உ-3-8)

## பாதுகாப்புத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோப்பு -

வலிகாமத்தில் கிழக்கு அரியாலை, அரியாலை, கொழும்புத்துறை, மணியம்தோட்டம், பாஷையூர், சுண்டுக்குழி, பாண்டியன்தாழ்வு, நாயன்மார்கட்டு, கல்வியங்காடு -

ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு புலிகள் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

(உ-8)

## ராமதாஸ் கோரிக்கை

சென்னை,மே11

இலங்கைப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு இது தான் சரியான தருணம். இந்திய அரசு இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி இந்த விவகாரத்தில் தலையிட்டு இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரு சமாதான நிலையை உருவாக்க வேண்டும்.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் ஆர்.ராமதாஸ் நேற்று சென்னையில் செய்தியாளர்களிடையே பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு எடுக்கும் முடிவுக்கு தமது கட்சி பூரண ஆதரவு அளிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இனம் மற்றும் கலாச்சார ரீதியில் இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தியாவுடன் தொடர்புபட்ட - இந்திய வம்சாவழியைச் சேர்ந்த - மக்கள் ஆண்டு வாழ்ந்து வருகின்றனர். அந்த நாட்டுக்கு அயல் நாடாக விளங்கும் இந்தியாவுக்கு இலங்கைப் பிரச்சினையில் தலையிட தார்மீக உரிமையுண்டு.

"அமெரிக்காவிலோ அல்லது இஸ்ரேல், பாகிஸ்தான் போன்ற நாடுகளோ இந்த விடயத்தில் தலையிட்டு இலங்கையில் உள்ள ஈழத் தமிழருக்கு பாதிப்பு ஏற்படுத்த இந்தியா ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது." - இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார்.

(உ-8)

## மகாபொல கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு,மே11

மகாபொல புலமைப்பரிசில் உதவிப்பணம் மேலும் இருநூறு ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று வர்த்தக வாணிப உணவு அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்தால் பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகளின் மாணவர்கள் நன்மை அடைவார்கள் என்று அவர் கூறினார்.

சபையில் ஒத்திவைப்பு வேளையில் நாடாளுமன்ற உறுப்பினர் கருணசேன கொடித்துவக்கு எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் அதிகரித்த உதவித்தொகை வழங்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

இந்த மாற்றத்துக்கு அமைய திறமை அடிப்படையில் புலமைப் பரிசிலைப் பெறும் ஒருவர் மாதாந்த உதவித்தொகையாக ஆயிரத்து 500 ரூபாவைப் பெற உரித்துடையவராவார்.

(உ-3)

## ஜும்மா பள்ளிவாசல் திருத்தப்படுகின்றது

யாழ்ப்பாணம்,மே11

யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் தற்போது திருத்தப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கியுள்ள முஸ்லீம்கள் சிலர் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

திருத்தவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை பள்ளிவாசலின் உள்ளே இருந்த ஒருவர் கூரையில் இருந்து வீழ்ந்த ஓடு ஒன்றினால் தலையில் காயமடைந்தார்.

[illegible] (வயது 34) என்பவரே காயமடைந்தவராவார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(உ-15)

புலிகளுக்கு ஆதரவான

# கனடா தமிழர் சங்க நிகழ்வில் 2 அமைச்சர்கள் பங்குபற்றினர்!

## இலங்கை அரசு கவலை தெரிவிப்பு

கொழும்பு,மே11

கனடாவில் இயங்கும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களில் ஒன்றான - "கனடா தமிழர் சங்கங்களின் சம்மேளனம்" ஏற்பாடு செய்திருந்த வைபவம் ஒன்றில் கனேடிய அரசாங்கத்தின் இரு அமைச்சர்கள் பங்குபற்றியமை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு இலங்கையில் உள்ள கனேடியத் தூதுவரிடம் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

கனடாவின் நிதிஅமைச்சா றொல் மார்ட்டினும், சர்வதேச ஒத்துழைப்புக்கான அமைச்சர் மரியா மின்னாவும் இந்த வைபவத்தில் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து இலங்கை அரசின் கவலையை கனேடிய அரசாங்கத்துக்கு தெரிவிப்பதாக இலங்கைக்கான கனேடியத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை -

ஒட்டாவாவில் உள்ள இலங்கைத் தூதுவர் ஆனந்தகுணசேகரவும் கனேடிய வெள்விவகாரத் தலைமையகத்துக்கும் சென்று இந்த விடயம் குறித்து விசனம் தெரிவித்துள்ளார்.

(உ-8)

# அமெரிக்க அமைச்சர் புதுடில்லி வருகின்றார்

## இலங்கை குறித்தும் பேசுவார்

கொழும்பு,மே11

அமெரிக்கத் துணை வெளிவிவகார அமைச்சர் தோமஸ் டிக்கொறின் இந்த மாதம் பிற்பகுதியில் புதுடில்லிக்கு விஜயம் செய்ய உள்ளார்

அவரது இந்திய விஜயத்தினை அடுத்து அவர் கொழும்புக்கும் விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை விவகாரம் தொடர்பாக அவர் இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார் என "இந்து" பத்திரிகை தெரிவித்தது.

பாதுகாப்புக்கு நிதி தேவை என்பதால்

# சிகரெட், மதுபானம் விலை அதிகரிப்பு!

கொழும்பு,மே11

சிகரெட், மதுபானம் ஆகியவற்றின் விலைகள் உடனடியாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

சிகரெட் ஒன்றின் விலை 50 சதத்தாலும் மதுபானத்தின் விலை போத்தல் ஒன்றுக்கு குறைந்தது 10 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்புக்கள் மூலம் அரசாங்கத்துக்கு சுமார் 150 கோடி ரூபா கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய பாதுகாப்புக்குத் தேவையான வருமானத்தை அதிகரிப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு கூறியுள்ளது.

(உ-8)

# செ.ஞ். கப்பல் சேவை நேற்று நடைபெற்றது

யாழ்ப்பாணம்,மே11

நேற்று யாழ். நகரில் ஊரடங்கு அமுலில் இருந்தபோதும் -

விசேட அனுமதியின் பேரில் நோயாளர்களை கப்பல் மூலம் அனுப்பும் பணியை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மேற்கொண்டது.

கொழும்பில் மேலதிக சிகிச்சை பெறுபவர்கள், அவரது உதவியாளர்கள் என 30பேர் நேற்றைய கப்பலில் செல்லப் பதிவு செய்திருந்தனர்.

ஆனால் ஊரடங்கு காரணமாக பத்துப் பேர் மட்டுமே பயண ஏற்பாடுகளுடன் நேற்றுக் காலை யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தனர்.

அவர்களை மட்டும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு காங்கேசன் துறைக்கு அழைத்துச் சென்றது. அங்கிருந்து அவர்கள் கப்பல் மூலம் திருமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

மேலதிக சிகிச்சை பெற்றுத் திரும்பியவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அழைத்து வந்தது.

இந்தக் கப்பலில் 165 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டன. இங்கிருந்து தபால் எதுவும் அனுப்பப்பட வில்லை.

(உ-3)

## மெய்வல்லுநர் போட்டிகள்

எதிர்வரும் 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மாவட்டமட்ட மெய்வல்லுநர் போட்டிகள் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஐந்து வலயங்களிலும் நடத்தப்பட்ட வலய மட்டப் போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்ற வீரர்களும் மற்றும் அணியினரும் பங்குபற்றுவர்.


## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிராசா மாணிக்கம்

மயிலிட்டி தெற்கு கட்டுவனைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா மாணிக்கம் நேற்று (10-05-2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் மனைவியும் காலஞ்சென்ற செல்வராசா, நல்லம்மா, தவமணி, நாகம்மா, தருமராசா, வேலாயுதம், க்நதசாமி (ரெலிகொம், கொழும்பு), ஜெயராசா (பிரான்ஸ்), தவராசா (ஆசிரியர், யா/மகாஜனாக் கல்லூரி) ஆகியோரின் தாயாரும் குலேந்திரன் காலஞ்சென்ற அரியராஜசிங்கம், யோகராசா (அஜந்தா காமன்ஸ், நெல்லியடி), மோகனாதேவி, ஸ்ரீரஜனி, சுந்தரராணி (ரெலிகொம், கொழும்பு), தர்மசோதி (பிரான்ஸ்), சிவசந்திரா (ஆசிரியை, மல்லாகம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சின்னையா, ஆச்சிமுத்து ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-05-2000) வியாழக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.தவராசா
(மகன்)

*20, கடவைப்புலம்,*
*சுன்னாகம்.*

(C/12098)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org